# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## அரையாண்டுத் தேர்வு - 2010 - 2011

## தமிழ்மொழி - ஆண்டு 9

சுட்டெண்:........................................................ நேரம்: 150 மணித்துளிகள்

**1) தேர்விடை வினா விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. பளிங்கு போன்ற கள்ளமற்ற மனம். இதில் இடம்பெற்றுள்ள உவமானம்
   அ) பளிங்கு ஆ) மனம் இ) கள்ளம் ஈ) போன்ற

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. உரிச்சொற்களுக்கு எடுத்துக்காட்டு
   அ) சில பல ஆ) உறு சால இ) சால சீல ஈ) சீறு நுறு

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. தனிநாயகம் அடிகளாரின் இயற்பெயர்
   அ) பிரான்சிசு ஆ) தோமசு இ) கிறித்தோபர் ஈ) சேவியர்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. அடுக்குத்தொடருக்கு எடுத்துக்காட்டு
   அ) நடுங்கிநடுங்கி ஆ) மளமள இ) சின்னஞ்சிறிய ஈ) கன்னங்கரிய

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. தரப்பட்டுள்ள சொற்களில் பகுசொல்
   அ) தமிழ் ஆ) மரம் இ) பழம் ஈ) தமிழர்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. அத்து அற்று என்பவை
   அ) சந்தி ஆ) சாரியை இ) இடைச்சொல் ஈ) விகுதி

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. சிங்களரின் மூதாதை எனப்படுபவன்

அ) மகாநாம ஆ) பொன்சேகா இ) விசயன் ஈ) தர்மபாலன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. பெருங்கற்கால மக்களின் ஈமத்தாழிகள் நிறைந்து காணப்படும் இடம்

அ) கந்தரோடை ஆ) பொம்பரிப்பு இ) பூநகரி ஈ) அனுராதபுரம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. வரலாற்றுக் காலத்திற்கு முன்பே வடதமிழீழத்தில் மன்னராட்சி இருந்ததைக் காட்டும் இடங்களில் ஒன்று

அ) முல்லைத்தீவு ஆ) ஆனையிறவு இ) மன்னார் ஈ) கந்தரோடை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. நாகதீபம் பற்றிய குறிப்புக் காணப்படும் தமிழ் இலக்கியம்

அ) மணிமேகலை ஆ) சிலப்பதிகாரம் இ) மகாவம்சம் ஈ) சீவகசிந்தாமணி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. ஈச்சுரங்கள் கட்டப்பட்ட காலம்

அ) கி.மு 6 ம் நூற்றாண்டு ஆ) கி.மு 15 ம் நூற்றாண்டு

இ) கி.மு 25 ம் நூற்றாண்டு ஈ) காலம் தெரியாது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. சவ அடக்கம் செய்யும் மட்பாண்டத்தை இப்படிக் கூறுவர்

அ) சவப்பெட்டி ஆ) ஈமத்தாழி இ) கல்லறை ஈ) பானை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. பூ + மரம் = பூமரம் இப்புணர்ச்சி

அ) இயல்புப் பணர்ச்சி ஆ) திரிதற்புணர்ச்சி

இ) கெடுதற் புணர்ச்சி ஈ) தோன்றற் புணர்ச்சி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. புல் - தரை என்பதைப் புணர்த்தினால்

அ) புல்த்தரை ஆ) புற்றரை இ) புல்தரை ஈ)புல்றரை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. கணக்குப் பாராமல் கண்டபடி செலவழித்தலை உணர்த்தும் மரபுத்தொடர்

அ) ஆற்றில் புளி கரைத்தல் ஆ) ஓட்டைக்கை

இ) கண்மண் தெரியாமல் ஈ) அள்ளி இறைத்தல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. ஆற்றங்கரை இச்சொற்றொடரின் புணர்ச்சியைப் பிரித்தால்

அ) ஆற்றம் + கரை ஆ) ஆறு + கரை

இ) ஆற்றங் + கரை ஈ) ஆறு + அம் + கரை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. பாடநூலில் தமிழின் காவலன் எனப்பட்டவர்

அ) தேவநேயப் பாவாணர்　　ஆ) உருத்திரமூர்த்தி

இ) தனிநாயகம் அடிகளார்　　ஈ) இளங்கோ அடிகள்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

18. அணில் மரத்தில் ஏறிக் கொய்யாப்பழத்தைக் கொறித்துத் தின்றது

அ) தனிச்சொல்லியம்　　ஆ) கலப்புச் சொல்லியம்

இ) கூட்டுச் சொல்லியம்　　இ) கூட்டுக் கலப்புச் சொல்லியம்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

19. பாடநூலில் நாட்டுக்காக வீரம் காட்டிய சிறுவனின் கதையைக் கூறும் பாடலின் தலைப்பு

அ) தாயின் தாலாட்டு　　ஆ) வீரத்தாலாட்டு

இ) புதியதொரு வீடு　　ஈ) மீண்டும் தொடங்கும் மிடுக்கு

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

20. மகாவம்சம் என்னும் பொய் வரலாற்றை எழுதியவர்

அ) நாயக்கதேரர்　ஆ) சோவன்சதேரர்　இ) நந்தானந்ததேரர்　ஈ) மகாநாமதேரர்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

21. மகாவம்சம் எம்மொழியில் எழுதப்பட்டது?

அ) சிங்களம்　ஆ) பாளி　இ) தமிழ்　ஈ) எலு

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

22. மீண்டும் தொடங்கும் மிடுக்கில் ஆட்டத்து மங்கையர் போல் நின்றவை

அ) பெண்கள்　ஆ) நெல்லுப்பொதிகள்　இ) நெற்பயிர்கள்　ஈ) பனைகள்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

23. ஈரமின்றிக் காய்ந்து இறுகிப்போன நிலத்தைக் கவிஞர் இவ்வாறு கூறுகிறார்

அ) பாறை　ஆ) கல்　இ) சதுப்பு　ஈ) குன்று

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

24. கடலில் ஓடி வலைவீசும் தொழில்

அ) கப்பலோட்டல்　　ஆ) மீன்பிடித்தல்

இ) வேட்டையாடல்　　ஈ) உப்புவிளைவித்தல்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

25. தென்னிலங்கையின் முதற்குடி மக்கள்

அ) மாயமாந்தர்　ஆ) வன்னியர்　இ) நாகர்　ஈ) இயக்கர்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

26. பால்நிலா இதில் உவமானத்துக்கும் உவமேயத்துக்கும் இடையில் உள்ள பொதுத்தன்மை

அ) அழகு ஆ) வெண்மை இ) ஒளி ஈ) குளிர்மை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. உருவகவணிக்கு எடுத்துக்காட்டு

அ) முகமலர் ஆ) மலர்முகம் இ) வெண்ணிலா ஈ) மழைமுகில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. தெரிநிலைவினை என்பது

அ) காலம் காட்டும் ஆ) காலம் காட்டாது

இ) குறையாய் நிற்கும் ஈ) பால்காட்டாது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. நல்லோர் வாழ்க நீடு! இதில் வாழ்க என்பது

அ) ஏவல் ஆ) கூற்று இ) வியங்கோள் ஈ) வினா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. விசயன் திருமணம் செய்த இயக்கர்குலப் பெண்ணின் பெயர்

அ) வன்னிச்சி ஆ) குவேனி இ) இயக்கி ஈ) நாச்சி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

(புள்ளிகள் 30)

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

காலந்தோறும் சான்றோரான பெரும் புலவோர் தோன்றி, தாயினுமினிய தமிழ்மொழியைப் பேணிக் காத்து வந்துள்ளனர். அந்த வரிசையில் ஒப்பாரும் மிக்காரும் அற்ற வண்புகழ் மூவர் தொல்காப்பியரும், வள்ளுவரும் தேவநேயப்பாவாணரும் ஆவர். தொல்காப்பியர் மூவாயிரங்களுக்கு முந்தியவர்: திருவள்ளுவர் ஈராயிரங்களுக்கு முற்பட்டவர். தேவநேயப்பாவாணர் நம்காலத்தவர். தொல்காப்பியர் தமிழ் இலக்கணத்தைத் தெளித்துத் தொகுத்து நூல் செய்தார். வள்ளுவர் உலகம் போற்றும் திருக்குறளைப் பாடினார். தேவநேயரோ உலகின் முதன்மொழி தமிழ் உலகின் முதன்மாந்தன் தமிழன் அவன் தோன்றிய இடம் கடலுள் ஆழ்ந்துபோன குமரிக்கண்டம் என்றும் நிறுவினார். வறுமையிலும் தளராது ஐம்பது ஆண்டுகாலம் முயன்று ஆய்வு செய்து மேற்கண்ட உண்மைகளை நிறுவினார். அவரது முடிவுகளால் கிளர்ந்தெழுந்த தமிழர் எழுசுடர்ஞாயிறு, மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் என்று அவரைப் போற்றுகின்றனர். தேவநேயப்பாவாணர் பிறந்திலரேல் இன்று பார்ப்பனர் தமிழைச் சமற்கிருதத்தால் மூடியிருப்பர்.

1. எதனிலும் இனியது தமிழ்மொழி?

2. தொல்காப்பியர் தொகுத்த இலக்கண நூலின் பெயரென்ன?

3. உலக முதன்மொழியான தமிழ் தோன்றிய இடம் எது?

4. தேவநேயப் பாவாணர் பிறந்திலரேல் பார்ப்பனர் என்ன செய்திருப்பர்?

5. திருவள்ளுவர் எவ்வளவு காலத்திற்கு முற்பட்டவர்?

(புள்ளிகள் 10)

## 3) பாடநூல் வினா ஐந்திற்கும் முழு விடை தருக.

1. உழைப்பாளியின் மிடுக்கு மீண்டும் எவ்வாறு தொடங்குகிறது?

2. பெருங்கற்காலத்தில் எமது முன்னோர் எவ்வாறு இறந்தோரை அடக்கம் செய்தனர்?

3. மகாவம்சம் ஒரு பொய்நூல் என்பதைச் சான்றுகளுடன் விளக்குக

4. தனிநாயகம் அடிகளார் செய்த தமிழ்த் தொண்டுகள் இரண்டு கூறுக.

5. பழந்தமிழகத்தில் ஒரு தாய் எத்தகையவளாய் இருந்தாள்?

(புள்ளிகள் 15)

## 4) கீழே தரப்பட்டுள்ள இலக்கண / மொழியியல் வினாக்களுக்கு விடை தருக.

1. இலக்கண வகையால் தமிழிலுள்ள சொற்கள் நால்வகை. அவற்றைத் தருக.

2. மாறுபடு புணர்ச்சி மூன்றையும் தந்து, ஒன்றை விளக்குக.

3. எழுதினான் என்ற பகுசொல்லைப் பிரிக்கவும்.

4. தரப்பட்டுள்ள சொற்றொடர்கள் இடம்பெறச் சொல்லியம் எழுதுக.

   **பளபள, கல்விகேள்வி, சிரித்துச்சிரித்து**

5. தரப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருள் தருக.

   களிறு ______________________

   ஐயந்திரிபற ______________________

   ஈமத்தாழி ______________________

   நித்திலம் ______________________

   வெறுவானவெளி ______________________

   முகர்ந்தான் ______________________

(புள்ளிகள் 15)

**5) தரப்பட்டுள்ள பாடலைப்படித்து, கீழேயுள்ள வினாக்களுக்கு முழுவிடை தருக.**

***தாயிலும் உயர்ந்தது தாய்மண் - தன்***
***உயிரிலும் உயர்ந்தது தாய்மொழி***
***தாய்மண்ணையும் மொழியையும் மறந்தவன் - தன்***
***உயிரையும் உடலையும் மறந்தான்***
***நேயம் அன்பு நேர்மை - நல்***
***அறங்கள் செய்வதே வாழ்க்கை***
***பாயும் புலியெனப் பகைவெல் - பண்பில்***
***பிறரையும் உன்போல் நேசி***
***நாயினும் கீழாய் உன்னை - பிறர்***
***நசுக்கிட நின்ற போதும்***
***வீரத்தை விட்டு விடாதே - வீரம்***
***வீழ்ந்து விடாதுனைக் காக்கும்***

1. உயிரினும் உயர்ந்தது எது?

______________________________

______________________________

2. வாழ்க்கை என்பது என்ன?

______________________________

______________________________

3. எதைப்போலப் பகையை வெல்ல முயலவேண்டும்?

______________________________

______________________________

4. வீரம் என்ன செய்யும்?

______________________________

______________________________

5. தாய்மண்ணையும் தாய்மொழியையும் மறந்தவன் - எதை மறந்தவனாவான்?

______________________________

______________________________

(புள்ளிகள் 10)

**6) கீழ்வரும் பந்தியை உமது வாழிட மொழியில் எழுதுக.**

**நல்லவரோடு நட்புக் கொள்வதே சிறந்தது. அவர்களது நற்பண்புகளினால் அவரது உள்ளத்தில் அன்பு நிறைந்திருக்கும். அவர்களோடு பேசுவதும் பழகுவதும் நல்ல பண்பை வளர்க்கும். நமக்குத் துன்பம் வந்த காலத்திலே அத்தகையோர் விரைந்து உதவுவர். நமது துன்பத்தை தமது துன்பமாகக் கருதி வருந்துவர் உள்ளத்திலே நல்லன்பு அற்றவருடைய நட்பால் நன்மை விளையாது. அது துன்பந் தரும் நட்பாக மாறிவிடும். ஆகவே, நாம் ஒருவரோடு நட்புக்கொள்ள விரும்பினால் அவர் எத்தகையவர் என்று அறிந்தே நட்புக்கொள்ள வேண்டும்.**

(புள்ளிகள் 05)

**7. கீழ்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. மீண்டும் தொடங்கும் மிடுக்கு
2. மகாவம்சம் ஒரு வரலாற்று நூலல்ல
3. வன்னிமக்களின் மண்ணும் வாழ்வும்
4. சூழல் மாசடைதல்

(புள்ளிகள் 15)